INDIA PARTNER | Dabur GROUP

# அவிவா நியூ ஃபேமிலி இன்கம் பில்டர்



AVIVA

| Life Insurance |



**அவிவா நியூ ஃபேமிலி இன்கம் பில்டர் - ஒரு தனி நபர், இணைக்கப்படாத, பங்கு பெறாத, சேமிப்புடன் கூடிய ஆயுள் காப்பீட்டுத் திட்டம்.**

அவிவாவில், நீங்கள் உங்கள் அன்பிற்கு உரியவர்களுக்கு ஒரு வசதியான இன்று மற்றும் நாளையை அளிப்பதற்கான உங்கள் முயற்சி மற்றும் கடின உழைப்பை நாங்கள் அங்கீகரிக்கிறோம். வழங்குகிறோம் அவிவா நியூ ஃபேமிலி இன்கம் பில்டர், ஒரு சேமிப்புடன் கூடிய பாதுகாப்பு சார்ந்த திட்டம் அது 12 வருடங்களுக்கு ரெகுலர் (தொடர்ச்சியான) பே அவுட்டுகளின் (ரொக்கம்) வடிவத்தில் வருமானத்தை உத்திரவாதப்படுத்தி உங்களுக்கு நிதி சார்ந்த உதவியை வழங்குகிறது. ஒரு வேளை உங்களுக்கு அகால மரணம் ஏற்பட்டால், இந்த ரெகுலர் பே அவுட்டுகள் உங்கள் குடும்பத்திற்கு வழங்கப்படும். இது, நீங்கள் இல்லாத பொழுதும் அவர்களுக்கு அதே வாழ்க்கை முறையை நீங்கள் தொடர்ந்து அளிப்பதை உறுதி செய்கிறது.

### அவிவா நியூ ஃபேமிலி இன்கம் பில்டர் - தனித்துவ ஈர்ப்புகள்

- **முதிர்வில் உத்திரவாத வருமானம்:**
  - வருட பிரீமியத்தை ஒவ்வொரு வருடமும் 12 வருடங்களுக்கு செலுத்தவும் மற்றும் செலுத்திய பிரீமியத்தின் இரண்டு மடங்கை அடுத்த 12 வருடங்களுக்கு கீழ்க்கண்ட முறையில் பெறவும்:
    - 13 வது முதல் 24வது வருடம் வரை ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் வருடாந்திரப் பிரீமியத்தின் 1.5 மடங்கு
    - கூடுதல் நன்மையாக, 24வது வருடத்தின் இறுதியில், கடைசி பே அவுட்டுடன் வருடாந்திரப் பிரீமியத்தின் 6 மடங்கு வழங்கப்படுகிறது.
  - கூடுதலாக, பிரீமியம் செலுத்தும் காலமான 12 வது வருடத்தின் இறுதியில், உங்கள் நுழைவு வயதின் அடிப்படையில், ஒரு உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மையையும் நீங்கள் பெற்றிடுவீர்கள்.
- **ஒரு வேளை உங்களுக்கு மரணம் ஏற்படுமாயின் உங்கள் குடும்பத்திற்கு உத்திரவாத வருமானம்:**
  - ஒரு வேளை பாலிசி காலத்திறகுள் மரணம் ஏற்படுமாயின், வருடாந்திரப் பிரீமியத்தின் 1.5 மடங்குக்கு நிகரானத் தொகை 12 ரெகுலர் வருட தவணைகளாக வழங்கப்படும், இதில் முதல் தவணையானது, இழப்பீடு கோரல் செட்டில்மெனட் சமயத்தில் வழங்கப்படும் மற்றும் மீதமுள்ள 11 வருட தவணைகள் ஆயுள் காப்பீட்டாளரின் ஒவ்வொரு மரண வருடாந்திரத்திலும் வழங்கப்படுகிறது.
  - கூடுதல் நன்மையாக "வருடாந்திரப் பிரீமியத்தின் 6 மடங்கு" 11வது மரண வருடாந்திரத்தில் கடைசி வருடத் தவணையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.
  - கூடுதலாக, உங்கள் நாமினி உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மையை முதல் பே அவுட்டுடன் பெறுகிறார்.

### அவிவா நியூ ஃபேமிலி இன்கம் பில்டர் - தகுதி

| **வழியலகு** | **அளவுகோல்** | |
|---|---|---|
| நுழைவில் வயது | 6 முதல் 50 வருடங்கள் வரை கடைசி பிறந்தநாளின்படி | |
| முதிர்வில் வயது | 18 முதல் 62 வருடங்கள் வரை கடைசி பிறந்தநாளின்படி | |
| பாலிசி காலம் | 12 வருடங்கள் | |
| பிரீமியம் செலுத்தும் காலம் | 12 வருடங்கள் | |
| பே அவுட் காலம் | பிறகு 12 வருடங்கள் அதாவது 13 முதல் 24 வருடங்கள் வரை | |
| வருடாந்திரப் பிரீமியம் (குறைந்தபட்சம்) | ₹40,000 | |
| வருடாந்திரப் பிரீமியம் (அதிகபட்சம்) | ₹1,00,00,000 (ஒரு நபருக்கு) | |
| ரொக்க உத்திரவாதம் | **ரொக்க உத்திரவாதமானது உங்கள் வருடாந்திரப் பிரீமியத்தின் 24 மடங்காகும்** | |
| | **குறைந்தபட்ச ரொக்க உத்திரவாதம்** | **அதிகபட்ச ரொக்க உத்திரவாதம்** |
| | ₹9,60,000 (குறைந்தபட்ச வருடாந்திரப் பிரீமியம் ₹40,000 X 24) | ஒரு நபருக்கு ₹24,00,00,000 (அதிகபட்ச வருடாந்திரப் பிரீமியம் ₹1,00,00,000 X 24), குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) பாலிசிக்கு உட்பட்டு |
| பிரீமியம் செலுத்தும் வீதம் | வருடாந்திர வீதம் மட்டும் | |

**தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள் :**

1. ''வருடாந்திரப் பிரீமியம்'' என்றால், என்றால், பாலிசிதாரர் தேர்ந்தெடுத்தபடி, வரிகள், ரைடர் பிரீமியங்கள் மற்றும் எழுத்துக் காப்புறுதி(அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால், அவை நீங்கலாக, ஒரு வருடத்தில் செலுத்தக்கூடிய பிரீமியம் ஆகும்.
2. அரசாங்கம் அவ்வப்பொழுது அறிவித்தபடி, வரிகள், பின் வருவனவற்றை சேர்த்து ஆனால் அதனுடன் வரையறுக்காமல், சரக்கு மற்றும் சேவை வரி, பொருந்தத் தக்க செஸ்கள் ஆகியவையும் விதிக்கப்படும். வரிச் சட்டங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.
3. பின் தேதி இடும் காலங்களுக்காக, பொருந்தத்தக்க பிரீமியம் மற்றும் ஆண்டிற்கு 9% மாத கூட்டு வட்டியாக செலுத்தும் பொழுது, பாலிசியை நடப்பில் இருக்கும் நிதி ஆண்டுக்குள் பின் தேதி இடமுடியும்.
4. ஒருவேளை பாலிசி துவக்கத்தில் ஆயுள் காப்பீட்டாளர் இளையவராக (மைனர்) இருந்தால்:
   - ஆயுள் காப்பீட்டாளரின் சார்பாக பாலிசிதாரர் பிரீமியத்தை செலுத்தலாம், அவர் பெற்றோர், பாட்டி, தாத்தா அல்லது சட்டபூர்வ பாதுகாவலர் ஆகிய யாராவது ஒருவராக இருக்கலாம். பிரீமியம் செலுத்தும் காலம் முடியும் முன்னர் ஒரு வேளை பாலிசிதாரர் இறக்க நேரிடும் பொழுது, எதிர்காலப் பிரீமியத்தை, ஆயுள் காப்பீட்டாளரின் உயிர் வாழும் பெற்றோர் / சட்டபூர்வ பாதுகாவலர் செலுத்த முடியும். ஒரு வேளை எதிர்காலப் பிரீமியங்கள் செலுத்தாமல் இருந்தால், காலாவதி / பெய்ட் அப் ஷரத்துக்கள் பிரயோகிக்கப்படும்.
   - பாலிசி துவங்கப்படும் நாளில் இருந்து காப்பீடும் துவங்குகிறது
   - ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் சிறுவராக (மைனர்) இருக்கும் பொழுது, பாலிசிதாரர் மரணமுற நேர்ந்தால், ஆதார ஆவணங்கள் சமர்ப்பிப்பதன் பெயரில் மற்றும் இழப்பீடு கோரல் ஒப்புக் கொண்ட பிறகு ஆயுள் காப்பீட்டாளரின் உயிர்வாழ் பெற்றோர் / சட்டபூர்வ பாதுகாவலர் பாலிசிதாரராகக் கருதப்படுவார். ஆயுள் காப்பீட்டாளர் அவரது 18வது வயதை, அவரது கடைசி பிறந்தநாளின்படி பூர்த்தி செய்த உடன் பாலிசியானது தானாகவே அவரது பெயருக்கு மாற்றப்படும்.

### அவிவா நியூ ஃபேமிலி இன்கம் பில்டர் - திட்ட நன்மைகள்

**முதிர்வு நன்மை:**

பாலிசி காலம் இறுதிவரை ஆயுள் காப்பீட்டாளர் உயிர் வாழும் பொழுது மற்றும் அனைத்து உரிய பிரீமியங்களும் செலுத்தி இருந்தால்; முதிர்வில் ரொக்க உத்திரவாதமானது கீழ்க்கண்ட முறையில் வழங்கப்படும்:


- ''வருடாந்திரப் பிரீமியத்தின் 1.5 மடங்கு'' பே அவுட் (ரொக்கம் வழங்குதல்) காலத்தில் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் 12 வருடத் தவணைகளாக வழங்கப்படுகிறது.
- ''வருடாந்திரப் பிரீமியத்தின் 6 மடங்கு'' பே அவுட் (ரொக்கம் வழங்குதல்) காலத்தின் இறுதியில் ஒரு ரொக்கத் தவணையாக வழங்கப்படுகிறது.

''வருடாந்திரப் பிரீமியம்'' என்றால், என்றால், பாலிசிதாரர் தேர்ந்தெடுத்தபடி, வரிகள், ரைடர் பிரீமியங்கள் மற்றும் எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால், அவை நீங்கலாக, ஒரு வருடத்தில் செலுத்தக்கூடிய பிரீமியம் ஆகும்.

ஒரு கூடுதல் உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மையாக, நுழைவு வயதின் அடிப்படையில் பிரீமியம் செலுத்தும காலத்தின் இறுதியில் வழங்கப்படுகிறது.

ரெகுலர் வருமானத்தை பெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் மரணமுற நேர்ந்தால், மீதம் உள்ள ரெகுலர் பே அவுட்டுகள் அவரது நாமினி / பயனாளிக்கு வழங்கப்படும்.

**உதாரணம்:** உங்களுக்கு 35 வயது ஆகிறது மற்றும் ₹1 இலட்சம் + பொருத்தமான வரிகளை 12 வருடங்களுக்கு செலுத்துகிறீர்கள். 12 வருட இறுதியில், உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மையாக நீங்கள் ₹8000/- பெறுகிறீர்கள் மற்றும் ₹24 இலட்சத்தை அடுத்த 12 வருடங்களுக்கு ரெகுலர் மாத வருமானமாக ₹1.5 இலட்சத்தை ஒவ்வொரு வருடமும் 13வது முதல் 24வது வருட இறுதியில் பெறுகிறீர்கள் மற்றும் மேம்பட்ட நன்மையாக ₹6 இலட்சத்த கடைசி பே அவுட்டாக 24வது வருட இறுதியில் பெறுகிறீர்கள்.



**மரண அனுகூலம்**

பாலிசி காலத்தின் பொழுது ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளருக்கு மரணம் ஏற்பட்டால், மரண நாள் வரை அனைத்து உரிய பிரீமியங்களும் செலுத்தி இருப்பதற்கு உட்பட்டு, வழங்கப்படும் மரண அனுகூலமானது, கீழே அளிக்கப்பட்டுள்ள தொகைகளில் அதிகமானது:

a) வருடாந்திரப் பிரீமியத்தின் 10 மடங்கு அல்லது

b) மரண நாள் வரை செலுத்திய மொத்த பிரீமியங்களின் 105% அல்லது

c) பாலிசியின் ரொக்க உத்திரவாதம்

செலுத்திய மொத்த பிரீமியம் என்றால் பெறப்பட்ட மொத்த பிரீமியங்கள், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக.

ரொக்க உத்திரவாதமானது கீழ்க்கண்ட முறையில் வழங்கப்படுகிறது.

- 12 ரெகுலர் வருடத் தவணைகள் "வருடாந்திரப் பிரீமியத்தின் 1.5 மடங்கு" என வழங்கப்படும். இழப்பீடு கோரல் செட்டில்மென்டின் பொழுது முதல் தவணை வழங்கப்படுகிறது மற்றும் மீதம் உள்ள 11 வருட தவணைகள் ஆயுள் காப்பீட்டாளரின் முதல் மரண வருடாந்திரத் தேதியில் துவங்கி, ஒவ்வொரு மரண வருடாந்திரத்திலும் வழங்கப்படுகிறது.
- ஒரு மொத்தத் தொகை அதாவது "வருடாந்திரப் பிரீமியத்தின் 6 மடங்கு" ஆயுள் காப்பீட்டாளரின் 11 வது மரண வருடாந்திரத்தில் 12 வது தவணையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

''வருடாந்திரப் பிரீமியம்'' என்றால், என்றால், பாலிசிதாரர் தேர்ந்தெடுத்தபடி, வரிகள், ரைடர் பிரீமியங்கள் மற்றும் எழுத்துக் காப்புறுதி(அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால், அவை நீங்கலாக, ஒரு வருடத்தில் செலுத்தக்கூடிய பிரீமியம் ஆகும்.

கூடுதல் உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை, மரணத்திற்கான இழப்பீடு கோரல் செட்டில்மென்ட் நன்மைத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

**உதாரணம்:**

ஆறாவது பாலிசி வருடத்தில், ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளருக்கு மரணம் ஏற்பட்டால் (பாலிசி துவக்கத்தில் 35 வயது)


- பாலிசி துவங்கிய நாள்: 1, நவம்பர், 2015.
- பாலிசிதாரர் ₹1 இலட்சம் மற்றும் வரிகள் என வருடாந்திரப் பிரீமியமாக 6 வருடங்கள் செலுத்தி பின்னர் 1 டிசம்பர், 2020 இல் மரணமுறுகிறார்
- இழப்பீடு கோரல் 1 ஜனவரி 2021 இல் செட்டில் செய்யப்படுகிறது
- நாமினி / பயனாளி கீழே அளிக்கப்பட்ட முறையில் பெறுகிறார்.

a. ₹1.5 இலட்சம் 1, ஜனவரி 21 அன்று. ₹8,000 த்துடன் சேர்த்து (உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை).

b. அடுத்த 11 வருடங்களுக்கு, ₹1.5 இலட்சம் என 1, டிசம்பர் அன்று.

c. 12வது தவணையான ₹1.5 இலட்சத்துடன் ₹6 இலட்சம்

நாமினி / பயனாளிக்கு வழங்கப்படும் மொத்த நன்மைத் தொகையானது ₹24,08,000/-




**உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை**

நுழைவு வயதின் அடிப்படையில் ஒரு உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மையானது, மரணத்திற்கான இழப்பீடு கோரல் செட்டில்மென்ட் சமயத்தில் அல்லது பிரீமியம் செலுத்தும் காலத்தின் இறுதியில், எது முன்னர் நிகழ்கிறதோ அப்பொழுது வழங்கப்படுகிறது.

| நுழைவு பான்டில் வயது (வருடங்கள்) | உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை |
|---|---|
| 6-15 | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின் 12% |
| 16-25 | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின் 10% |
| 26-35 | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின் 8% |
| 36-40 | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின் 6% |
| 41-45 | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின் 4% |
| 46-50 | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின் 2% |

''வருடாந்திரப் பிரீமியம்'' என்றால், என்றால், பாலிசிதாரர் தேர்ந்தெடுத்தபடி, வரிகள், ரைடர் பிரீமியங்கள் மற்றும் எழுத்துக் காப்புறுதி(அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால், அவை நீங்கலாக, ஒரு வருடத்தில் செலுத்தக்கூடிய பிரீமியம் ஆகும்.

**காலாவதி / புதுப்பித்தல் / சரண்டர் ஆகியவற்றுக்கான ஷரத்துக்கள்**

**ஒரு வேளை குறைந்தது இரண்டு வருடங்கள் பிரீமியம் செலுத்தாமல் இருந்தால் :**

- முதல் 2 வருடங்களின் பொழுது, ஒரு வேளை கருணைக் காலம் முடியும் முன்னர், உரிய பிரீமியத்தை செலுத்தாவிட்டால், பாலிசி காலாவதி ஆகும்.
- காலாவதியான ஒரு பாலிசியை, செலுத்தாத முதல் உரிய பிரீமிய நாளில் இருந்து ஐந்து வருடங்களுக்குள் (புதுப்பித்தல் காலம்) ஒரு வேளை புதுப்பிக்காவிட்டால், செலுத்திய மொத்த பிரீமியத்தின் 30%ஐ வழங்கி பாலிசி முடிவு பெறும்.
- ஒரு காலாவதியான பாலிசியின் கீழ், புதுப்பித்தல் காலத்திற்குள் ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளரின் மரணம் நிகழுமாயின், மரண நாள் வரை செலுத்திய மொத்த பிரீமியங்களின் 100% திரும்ப வழங்கப்படும் மற்றும் பாலிசி முடிவு பெறும்.
- வேறு எந்த நன்மைகளும் வழங்கப்பட மாட்டாது.

செலுத்திய மொத்த பிரீமியம் என்றால் பெறப்பட்ட மொத்த பிரீமியங்கள், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக

**ஒரு வேளை குறைந்தது இரண்டு வருடங்கள் பிரீமியங்கள் செலுத்தி இருந்தால்:**

முதல் 2 வருடங்கள் பிரீமியங்களை செலுத்திவிட்டு, பிறகு ஒரு வேளை, கருணைக்காலம் முடியும் முன்னர் ஏதாவது உரிய பிரீமியங்களை செலுத்தாவிட்டால்:

- பாலிசியானது பெய்ட் அப்பாக மாறும்

செலுத்திய பிரீமியங்களின் மொத்த எண்ணிக்கை

பெய்ட் அப் ரொக்க உத்திரவாதம் = ...................................... x மரண ரொக்க உத்திரவாதம்

ஒப்பந்தத்தின கீழ் லெுத்த வேண்டிய மொத்த பிரீமியங்களின் எண்ணிக்கை

- **குறைக்கப்பட்ட பெய்ட் அப் நன்மைகளானது கீழ்க்கண்ட முறையில் வழங்கப்படுகிறது:**

பாலிசி காலத்தில், ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளருக்கு மரணம் ஏற்படுமாயின், பெய்ட் அப் ரொக்க உத்திரவாதமானது கீழ்க்கண்ட முறையில் வழங்கப்படுகிறது.

- 12 ரெகுலர் வருடத் தவனைகளாக ''1.5 X (செலுத்திய பிரீமியங்களின் எண்ணிக்கை /12) வருடாந்திரப் பிரீமியத்தின்'' மடங்குசு வழங்கப்படும்.
  - முதல் தவணையானது மரணத்திற்கான இழப்பீடு கோரல் செட்டில்மென்ட் சமயத்தில் வழங்கப்படும் கூடுதலாக உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை X (செலுத்திய பிரீமியங்களின் எண்ணிக்கை / 12).
  - மீதம் உள்ள 11 வருடத் தவணைகளானது, ஆயுள் காப்பீட்டாளரின் ஒவ்வொரு மரண வருடாந்திரத்தில் வழங்கப்படும், முதல் தவணையானது மரண வருடாந்திர நாளில் துவங்கப்படும்.
- ஒரு ரொக்கத் தொகை அதாவது ''6 X (செலுத்திய பிரீமியங்களின் எண்ணிக்கை /12) வருடாந்திரப் பிரீமியத்தின் மடங்கு", 12வது வருடாந்திரத் தவணையுடன் சேர்த்து வழங்கப்படும்.

முதிர்வு நாள் வரை ஆயுள் காப்பீட்டாளர் உயிர் வாழும் பொழுது, பெய்ட் அப் ரொக்க உத்திரவாதம் வழங்கப்படுகிறது

- பிரீமியம் செலுத்தும் காலத்தின் இறுதியில், உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை X (செலுத்திய பிரீமியங்களின் எண்ணிக்கை / 12).
- 12 ரெகுலர் வருடத் தவனைகளாக ‘‘1.5 X (செலுத்திய பிரீமியங்களின் எண்ணிக்கை /12) வருடாந்திரப் பிரீமியத்தின் மடங்குசு பே அவுட் காலத்தில், ஒவ்வொரு வருட இறுதியிலும் வழங்கப்படும்.
- ஒரு ரொக்கத் தொகை அதாவது ‘‘6 X (செலுத்திய பிரீமியங்களின் எண்ணிக்கை /12) வருடாந்திரப் பிரீமியத்தின் மடங்கு”, பே அவுட் காலத்தின் இறுதியில் வழங்கப்படும்.

‘‘வருடாந்திரப் பிரீமியம்’’ என்றால், என்றால், பாலிசிதாரர் தேர்ந்தெடுத்தபடி, வரிகள், ரைடர் பிரீமியங்கள் மற்றும் எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால், அவை நீங்கலாக, ஒரு வருடத்தில் செலுத்தக்கூடிய பிரீமியம் ஆகும்.

**புதுப்பித்தல்:**

ஒரு காலாவதியான / பெய்ட்-அப் பாலிசியை, செலுத்தாத முதல் பிரீமிய நாளில் (FUP) இருந்து புதுப்பித்துக் கொள்ள பாலிசிதாரருக்கு ஐந்து வருடங்கள் இருக்கிறது. புதுப்பித்தலானது, நிறுவனத்தின் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட நடப்பில் இருக்கும், எழுத்துக் காப்புறுதி (அன்டர்ரைட்டிங்) பாலிசியின் படி, காப்பீட்டாளர் தொடர்ச்சியாக காப்பீடு செய்து கொள்ள முடியும் என்பதற்கான ஆதாரத்தை நிறுவனத்தின் திருப்திக்கு ஏற்ப சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு மற்றும் புதுப்பித்தல் ரொக்கத்திற்கு உட்பட்டும் அமையும் மற்றும் அனைத்து உரிய பிரீமியங்களும் புதுப்பித்தல் கட்டணமான ₹250 மற்றும் வரிகள் ஏதாவது இருப்பின் அதையும் சேர்த்து மேலும் ஆண்டிற்கு @9% என மாதக் கூட்டு வட்டியாக, வரிகள் ஏதாவது இருந்தால் அதையும் சேர்த்து செலுத்த வேண்டும். பாலிசி காலம் முடிவடைந்த உடன் ஒரு பெய்ட் அப் பாலிசியை புதுப்பிக்க முடியாது.

## சரண்டர் மதிப்பு (SV)

குறைந்தபட்சம் இரண்டு வருட பிரீமியங்கள் செலுத்தி இருந்தால்ஒரு பாலிசியை எந்நேரத்திலும் சரண்டர் செய்ய முடியும். வழங்கப்படும் சரண்டர் மதிப்பானது, உத்திரவாத சரன்டர் மதிப்பானது, உத்திரவாத சரண்டர் மதிப்பு சிறப்பு சரண்டர் மதிப்பு ஆகியவற்றின் அதிகமானது.

- **உத்திரவாத சரண்டர் மதிப்பு:**

உத்திரவாத சரண்டர் மதிப்பு கீழ்க்கண்டவற்றிற்கு நிகரானது:

| சரண்டர் செய்யும் பாலிசி வருடம் | உத்திரவாத சரண்டர் மதிப்பு |
|---|---|
| 2nd | செலுத்திய மொத்த பிரீமியத்தின்* 35% |
| 3rd | செலுத்திய மொத்த பிரீமியத்தின்* 35% |
| 4th - 8th | செலுத்திய மொத்த பிரீமியத்தின்* 50% |
| 9th | செலுத்திய மொத்த பிரீமியத்தின்* 60% |
| 10th | செலுத்திய மொத்த பிரீமியத்தின்* 70% |
| 11th | செலுத்திய மொத்த பிரீமியத்தின்* 90% |
| 12th | செலுத்திய மொத்த பிரீமியத்தின்* 90% |

‘‘செலுத்திய மொத்த பிரீமியம்’’ என்றால் பெறப்பட்ட மொத்த பிரீமியங்கள், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக

- **சிறப்பு சரண்டர் மதிப்பு:**

சிறப்பு சரண்டர் மதிப்பானது பின் வருவனவற்றிற்கு நிகரானது:

சிறப்பு சரண்டர் மதிப்புக் காரணி x பெய்ட் அப் ரொக்க உத்திரவாதம்

சிறப்பு சரண்டர் மதிப்புக் காரணிகள் (SSV) IRDAவின் முன் அனுமதிக்கு உட்பட்டு அவ்வப்பொழுது நிறுவனத்தின் மறுபரிசீலனை மற்றும் முடிவிற்கு உட்பட்டது.

## முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகள்

**வரி நன்மைகள்**

வரி நன்மைகள், வருமான வரிச் சட்டம் 1961, பிரிவு 80C மற்றும் 10(10(D)) இன்படி ஆகும். வரி நன்மைகள் நடப்பில் இருக்கும் வரிச் சட்டங்களின்படி அமையும் மற்றும் அவை அவ்வப்பொழுது மாற்றத்திற்கு உட்பட்டது.

**கருணைக் காலம்**

‘‘கருணைக் காலம் என்றால்’’ பிரீமியத்தை செலுத்துவதற்கு உரிய நாளில் இருந்து கூடுதல் அவகாசத்தை, எந்தவித அபராதம் அல்லது தாமதக் கட்டணம் ஆகியவை இன்றி செலுத்துவதற்கு நிறுவனம் அளிக்கும் காலம் ஆகும், இந்த காலத்தில், எந்தவித தடங்கலும் இன்றி, பாலிசியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காப்பீட்டு பாதுகாப்புடன் பாலிசி நடைமுறையில் உள்ளது போல் கருதப்படும். பிரீமியம் செலுத்துவதற்கான இந்தக் கருணைக் காலமானது 30 நாட்கள் ஆகும்,

**நாமினேஷன் மற்றும் அசைன்மென்ட்**

காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 39 இல் வரையறுத்துள்ளபடி மற்றும் அவ்வப்பொழுது மாற்றப்படுவதற்கு உட்பட்டும் நாமினேஷனானது பாலிசியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 38 இல் வரையறுத்துள்ளபடி மற்றும் அவ்வப்பொழுது மாற்றப்படுவதற்கு உட்பட்டும் அசைன்மென்ட்டானது பாலிசியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

**கடன்**

இந்தப் பாலிசிக்கு எதிராக அவிவா எந்தவித கடன்களும் வழங்குவதில்லை

**இலவச பார்வைக் காலம் (ஃப்ரீ லுக் பீரியட்):**

பாலிசி ஆவணம் கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து 15 நாட்களுக்குள் (ஒரு வேளை பாலிசி தொலைதூர விற்பனை மூலம் கோரப்பட்டிருந்தால் முப்பது நாட்கள்) விதிகள் மற்றும் நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்யும் உரிமை பாலிசிதாரருக்கு உள்ளது. ஒரு வேளை இலவச பார்வைக் காலத்தில், பாலிசிதாரர் பாலிசியை ரத்து செய்தால், பிறகு, ரத்து செய்த நாளில் உள்ள பிரீமியத் தொகையில் மருத்துவ பரிசோதனைக்கான செலவு, ஏதாவது இருந்தால், மற்றும் விகிதாச்சார காப்பீட்டுக் கட்டணங்கள் மற்றும் முத்திரைத்தாள் வரிச் செலவுகளையும் கழித்துக்கொண்டு வரும் தொகை திரும்ப வழங்கப்படும்.

**தற்கொலைக்கான இழப்பீடு கோரல்கள் மற்றும் நீக்குதல்கள் (ஏதாவது இருந்தால்)**

பாலிசியின் கீழ் காப்பீடு துவங்கிய அல்லது புதுப்பித்தல் நாள் முதல் 12 மாதங்களுக்குள் ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளரின் மரணமானது தற்கொலை மூலமாக இருந்தால் மற்றும் பாலசி நடப்பில் இருப்பதற்கு உட்பட்டு, நாமினி அல்லது பாலிசிதாரரின் பயனாளர். மரண நாள் வரை செலுத்திய மொத்த பிரீமியங்களின் குறைந்தபட்சாம் 80%ஐ அல்லது மரண நாளில் உள்ள சரண்டர் மதிப்பு, இதில் அதிகமானதை பெற தகுதி பெறுகிறார்.

## ஒப்புதல்

காப்பீடு ஒப்புதல் மற்றும் முழுமையான பிரீமியம் கிடைக்கப் பெறும் வரை அவிவா, எந்த இழப்பீடு கோரல்களுக்கும் பொறுப்பாளி ஆகாது.

## காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 41

காப்பீட்டுச் சட்டம், 1938, பிரிவு 41இன் ஷரத்துக்களின்படி, மற்றும் அவ்வப்பொழுது திருத்துவதற்கு உட்பட்டு பிரயோகிக்கப்படுகிறது. தற்பொழுதைய ஷரத்துக்களின்படி:

(1) காப்பீட்டுச் சட்டம் 1938, (1) பிரிவு 41 இன்படி காப்பீட்டாளரின் அட்டவணை அல்லது வெளியிடப்பட்ட விற்பனை அறிக்கையில் அனுமதியளிக்கப்பட்ட தள்ளுபடியைத் தவிர எந்த ஒரு நபரும், நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு நபரையும் எந்தவித ஆயுள் அல்லது இந்திய நாட்டில் உள்ள சொத்துக்களை காப்பீடு செய்து கொள்ள, தொடர, புதுப்பிக்க அல்லது புதிதாக எடுக்க, முழுமையாக அல்லது பகுதி கமிஷனை அல்லது பாலிசியில் கூறப்பட்டுள்ள பிரீமியத்தில் தள்ளுபடி செய்து தூண்டக் கூடாது அல்லது எந்த ஒரு நபரும் ஒரு பாலிசியை எடுத்துக் கொள்ள அல்லது ரெனிவல் செய்ய, அல்லது தொடர்வதற்கு எந்தவித தள்ளுபடியையும் பெறக் கூடாது.

(2) இந்த ஷரத்துக்களின் விதிமுறைகளைப் பின்பற்றுவதில் எந்த ஒரு நபராவது தவறினால், அவருக்கு அபராதம் 10 இலட்சம் வரை நீட்டிக்கப்படும்.

## காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 45

காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 45இன் ஷரத்துக்கள் மற்றும் அவை அவ்வப்பொழுது திருத்தப்படுவதற்கு உட்பட்டும் ஒப்பந்தத்தில் பிரயோகிக்கப்படுகிறது.

## அவிவா பற்றி

**அவிவாவுடன் ஏன் முதலீடு செய்ய வேண்டும்?**

அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் என்பது டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட், ஒரு (UK) யூகேவை அடிப்படையாகக் கொண்ட ஒரு குழு, அதனுடனான இந்திய உறவு 1834 வரை பின்நோக்கிச் செல்லும், ஆகிய இரண்டின் கூட்டுறவு ஆகும். அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸை தேர்ந்தெடுத்ததன் மூலம், நீங்கள் உலகின் பழமையான காப்பீட்டுக் குழு ஒன்றின், அதன் வரலாறு 1696 வரை பின்நோக்கிச் செல்லும், நிர்வாக அனுபவத்தைப் பெறுகிறீர்கள். 1884 இல் தோற்றுவிக்கப்பட்ட டாபர் இந்தியா லிமிடெட், டாபர் நிறுவனத்தின் முதன்மை நிறுவனமானது, இந்தியாவின் பழமையான மற்றும் பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். இது பாரம்பரிய சுகாதாரப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

## கேள்விகள் மற்றும் புகார்கள்

மேலும் கூடுதல் விவரங்கள், கேள்விகள் அல்லது புகார்களுக்கு, தயவு செய்து கீழ்க்கண்ட எண்ணில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:

1800 103 7766 (BSNL/MTNL உபயோகிப்பாளர்களுக்கு இலவசம்)
அல்லது 0124-2709046 அல்லது SMS "Aviva" என்று 5676737
என்ற எண்ணிற்கு அனுப்பவும்
ஃபேக்ஸ் எண் : 0124- 2571210

AVIVA
| Life Insurance |

*டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.*

### அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

**தலைமை அலுவலகம்:** அவிவா டவர், செக்டார் ரோடு, கோல்ஃப் கோர்ஸ் எதிரில், DLF ஃபேஸ்-V, செக்டார் 43, குர்காவ்-122003, ஹரியானா, இந்தியா தொலைபேசி எண்: +91 124-2709000, ஃபேக்ஸ் எண்: +91 124-2571210
இணையதளம்: www.avivaindia.com
மின் அஞ்சல்: customerservices@avivaindia.com

**பதிவு அலுவலகம்:** 2வது மாடி, பிரகாஷ்தீப் பில்டிங், 7, டால்ஸ்டாய் மார்க், புது தில்லி-110001, இந்தியா.

நிறுவன அடையாள எண் (CIN): U66010DL2000PLC107880

போலியான தொலைபேசி அழைப்பு மற்றும் கற்பனையான / மோசடியான சலுகைகளில் இருந்து ஜாக்கிரதை: IRDA ஆஃப் இந்தியா பொதுமக்களுக்கு தெளிவு படுத்துவது என்னவென்றால்: • IRDA ஆஃப் இந்தியா அல்லது அதன் அதிகாரிகள், எந்த விதமாக காப்பீடு அல்லது நிதித் திட்டங்கள் அல்லது இன்வெஸ்ட் பிரீமியங்கள் ஆகியவற்றின் விற்பனை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. • IRDA வ் இந்தியா எந்தவித போனஸ் அறிவிப்புகளையும் வெளியிடுவதில்லை. அப்படிப்பட்ட தொலைபேசியை பெறும் பொதுமக்கள், தொலைபேசி அழைப்பின் விவரங்கள் மற்றும் எண் ஆகியவற்றைக் கொண்டு காவல் துறையில் ஒரு புகாரைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அவிவா நியூ ஃபேமிலி இன்கம் பில்டர் - ஒரு தனி நபர், இணைப்பு இல்லாத, பங்கு பெறாத, சேமிப்புடன் கூடிய ஆயுள் காப்பீட்டுத் திட்டம். மேலே அளிக்கப்பட்டுள்ள வர்த்தகச் சின்னம் அவிவா பிராண்ட்ஸ் லிமிடெடுக்கு சொந்தமானது மற்றும் அது உரிமம் பெற்று அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டால் வழங்கப்படுகிறது.
அவிவா நியூ ஃபேமிலி இன்கம் பில்டர் - ஒரு தனி நபர், இணைப்பு இல்லாத, பங்கு பெறாத, சேமிப்பு சார்ந்த காப்பீட்டுத் திட்டம். IRDA ஆஃப் இந்தியா எண்: 122. UIN : 122N103V04, Advt. No.: Nov 38/19, MKT/Nov 2019/Ver.2.0